# "பெண்ணியம் என்பது பன்முகத்தன்மை வாய்ந்தது"

**மாலதி மைதிரி இந்தியத் தமிழ் பெண் கவிஞர்களிலும், பெண்ணியாவாதிகளிலும் முக்கியமானவர். இவரது கவிதைத் தொகுதிகள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது "சங்கராபரணி" கவிதைத் தொகுதி 2001ம் ஆண்டு திருப்பூர் தமிழ் சங்கத்தின் விருதையும், பாண்டிச்சேரி அரசின் கம்பன் புகழ் விருதையும் பெற்றிருக்கின்றது. இவர் பல அரசியல், இலக்கியக் கட்டுரைகளை எழுதிவருவதோடு தற்போது "அணங்கு" சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார். 27 வது பெண்கள் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து ரொறொன்டொ வந்திருந்த இவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ரஞ்சனியின் இவ் நேர்காணலை வைகறை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்**


## நேர்காணல்
## ரஞ்சனி
ranjani@vaiakrai.com


**• இந்த பெண்கள் சந்திப்பில் நீங்கள் கலந்து கொள்வதற்கு உங்களுக்கு உந்துதலாக இருந்தது எது?**

பெண்கள் சந்திப்பைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். உலகளாவிய ரீதியில் பெண்கள் இப்படி சந்திப்பை நடத்துவது மிகவும் சிறப்பான விடயமாகும். ஆனால் இம்முறைதான் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எங்களுக்கான பிரச்சனைகள் வரும்போது அதைப்பற்றி கலந்து பேசி அதனை எப்படி எதிர் கொள்வது அதற்கு எப்படிப் பதில் சொல்வது என்ற ஒரு தயாரிப்புக்கு பெண்கள் சந்திப்பு உதவி புரிகிறது. நாம் கூடிப் பேசும் போது சில விடயங்களை முன்னெடுப்பதற்கான வழிகள் தென்பட வாய்ப்புக் கிடைக்கின்றது. இனிவரும் காலத்தில் உலகம் சார்ந்த பெண்கள் சார்ந்த ஒடுக்கு முறைகள் புதிய பிரச்சனைகள் பற்றிய எமது கருத்துக்களையோ, கண்டனங்களையோ தெரியப்படுத்துவதற்கு எமது உரிமைகள் பற்றியோ மற்றும் நடைமுறை விடயங்கள் பற்றியோ பேச குரல் எழுப்புவதற்கு ஒரு நல்ல முன்னெடுப்பு மையம் என எண்ணுகின்றேன்.

**• இந்த பெண்கள் சந்திப்புக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி, பெண்ணிய அமைப்புக்களில் உங்களுக்கு ஈடுபாடு வரக் காரணமாக அமைந்த சந்தர்ப்பங்கள் பற்றிச் சொல்லமுடியுமா?**

சிறுவயதில் இருந்தே இப்படியான அமைப்புக்களில் எனக்கு நிறையவே ஆர்வம் இருந்திருக்கிறது. மார்க்சியம் படித்துள்ளேன். பெண்ணியம், பெண்படைப்புரிமை சார்ந்த விடயங்களில் அத்து மீறல் நடக்கும் போது கூட்டங்களில் கண்டனக் குரல் கொடுப்பது, என் கருத்துக்களை முன்வைப்பது, என் கவிதைகளில் பெண்சார்ந்த பார்வைகளை வெளிக்கொணர்வது, வேறு எழுத்தாளர்களின் படைப்புக்களில் காட்டப்படும் பெண்ணிய நோக்கை ஆய்வு செய்வது போன்ற செயற்பாடுகள் என்னை பெண்ணிய வாதியாக அடையாளம் காட்டியன.

**• உங்களுக்கென்று ஒரு இயக்கம் அல்லது அமைப்பாக இயங்குகிறீர்களா அல்லது தனியே இயங்குகிறீர்களா?**

ஆரம்பத்தில் கட்சி சார்ந்த மகளிர் அமைப்பாக பெண்ணிய அமைப்புக்கள் இருந்தன. அவை தனித்தனியாக உதிரி அமைப்பாக இயங்கி வந்தன. ஆனால் அவை யாவும் பெண்கள் பிரச்சினைகளுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பெண்கள் பிரச்சினை கட்சிப்



பிரச்சினை கிடையாது என்ற எண்ணமே இருந்தது பெண்கள் பிரச்சினை ஒவ்வொரு தரப்பில் ஒவ்வொரு விதமாக அமைகிறது. இதற்கு ஒரு இயக்கம் அல்லது ஒரு அமைப்பு தேவை என்பதால் அணங்கு என்ற அமைப்பை உருவாக்கினோம். அதில் இருந்து தான் அணங்கு பத்திரிகை வருகிறது.

**• அணங்கு அமைப்பு இப்பொழுதும் இயங்குகிறதா?**

ஆமாம் இயங்கி வருகிறது. அதன் மூலமாக கேஸ் பைல் பண்ணுவது, படைப்பு சுதந்திரத்துக்கு எதிராக எம்மை கொச்சைப்படுத்துவது மாதிரியான நடவடிக்கைகளுக்கு, கட்டுரைகளுக்கு, கண்டனம் தெரிவிப்பது போன்ற விடயங்களை அணங்கு பத்திரிகையில் செய்கிறோம்.

**• உங்கள் பார்வையில் பெண்ணியம் என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? எது பெண்களுக்கான சுதந்திரம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பெண் சுதந்திரம் ஒரு பகுதி சார்ந்த விடயம் என நினைக்கிறேன். ஒட்டுமொத்தமாக சர்வதேச அளவில் பொதுமைப் படுத்த முடியாது. அந்தந்தப் பகுதியில் வாழும் பெண் அந்த சூழலில் தான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் சுதந்திரமாக நடமாடுகிறேன் என்று உணருவாளேயானால் அதையே நான் பெண் சுதந்திரமாக கருதுகிறேன். ஐரோப்பிய பெண்களுக்கு, ஆசிய பெண்களுக்கு, அரேபிய பெண்களுக்கு என வேறு

**பெண்கள் நடத்தையினால் உலகம் அழிந்துவிடப் போவது கிடையாது. அதிகார வெறியினால் உலகம் அழிந்துவிடும் அபாயம் உண்டு**

வேறுவிதமான தேவைகள் இருக்கிறன. அவரவர் சுதந்திரம் என நினைக்கும் வகையில் சுதந்திரம் சார்ந்து தேவைகளும் வேறுபடுகிறன. சில பகுதியில் உடைக் கட்டுப்பாடு இல்லை. சில பகுதியில் உடைக் கட்டுப்பாடு உண்டு. ஆனால் கருத்து சுதந்திரம் மறுக்கப்படுகிறது. பேச்சுரிமை மறுக்கப்படுகிறது. படைப்புரிமை வேலைசெய்யும் உரிமை மறுக்கப்படுகிறது. இது மாதிரியான issues நிறைய உண்டு. அப்புறம் மொழி ஒடுக்குமுறை, பாலியல் ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை இதுமாதிரியான விடயங்கள் யாவும் பகுதிக்கு பகுதி மாறுபடுகிறது. இதனை எடுத்து பார்க்கும் போது சர்தேச மட்டத்தில் ஒரே குரலில் பெண்ணியம் என்றால் என்ன சுதந்திரம் என்றால் என்ன என்று எதனையும் சொல்லிவிட முடியாது. பெண்ணியம் என்பது பன்முகத்தன்மை வாய்ந்தது.

**• ஒரு பெண் சந்தோசமாகவும் தான் சுதந்திரமாக இருக்கின்றேன் என்று நினைப்பதுதான் சுதந்திரம் என நினைக்கிறீர்கள். இல்லயா?**

ஆமாம். அவர்களின் எண்ணப்பாங்கில் தான் சுதந்திரம் அமைந்துள்ளது.

**• சில இடங்களில் சில விமர்சனங்கள் உண்டு. உதாரணமாக இலங்கையையும் கனடாவையும் எடுத்துக் கொண்டால் இலங்கையை விட இங்கு சுதந்திரம் நிறைய இருப்பதால் பெண்கள் அத்துமீறி நடப்பதாகவும் ஒரு கருத்துப்பாடு நிலவுகிறது. இதனால் கலாச்சார சீர்கேடுகள் நடக்கிறது என்ற குற்றச்சாட்டும் உண்டு இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இங்கு மட்டுமல்ல தமிழ் நாட்டில் ஏன் இலங்கையில் இருந்தாலும் இவ்விடயம் பேசப்படுகின்றது. இங்கு வாழும தமிழருக்கு மட்டுமன்றி குடியேறி வாழும் எல்லா நாட்டினருக்கும் இவ்விடயம் பொதுவானது. இனரீதியாக பார்க்கில் முஸ்லீம்களுகிடையே இம்மாதிரியான குற்றச்சாட்டு அதிகமாக உள்ளது. கலாச்சார சீர்கேடுகளுக்கு துணைபோகிறவர்கள் எல்லா நாட்டிலும் எல்லா சமூகத்திலுமே இருக்கிறார்கள். உடைமாற்றத்தால், கலாச்சார மாற்றத்தால் சீர்கேடுகள் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. ஆனால் இப்பொழுது நடைபெற்று வரும் யுத்த விளைவுகள் எத்தனை பாரதூர விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அதனை நிறுத்துவது எப்படி? நில ஆக்கிரமிப்பு யுத்தம், பொருளாதார யுத்தம் இவற்றால் எத்தனை அழிவுகள் ஏற்படுகின்றன. இதனை நிறுத்த வேண்டும் முதலில். இதனால் தான் உலக அழிவே ஏற்படும். பெண்கள் நடத்தையினால் உலகம் அழிந்துவிடப்போவது கிடையாது. அதிகார வெறியினால் உலகம் அழிந்துவிடும் அபாயம் உண்டு.

**• பெண்கள் பிறந்ததில் இருந்து அவர்கள் திருமணத்துக்காக வளர்க்கப்படும் பண்பே அழுத்தமாக சமுதாயத்தில் ஊடுருவி காணப்படுகிறது. ஒரு வயது வந்துவிட்டால் எப்போ திருமணம் என்ற கேள்வி தலைதூக்கி விடுகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

படித்து சிறிது முன்னேற்ற சிந்தனையில் ஊறி இருக்கும் பெண்களுக்கு திருமண எண்ணமே கிடையாது. அதனை சரி என்றே எண்ணுகின்றேன். சந்தோசம் எங்கே கிடைக்கிறதோ, சந்தோசமான சூழல் எங்கே இருக்கிறதோ அதுவே உண்மையான வாழ்வு. கல்யாணம் செய்யும் போதே எங்கள் சுதந்திரத்தை இன்னொருவருக்கு கொடுத்து விடுகிறோம் என்ற எண்ணம் அவர்களிடையே இருக்கிறது. அதுவும் உண்மையே. பெண்கள் கல்யாணம் பண்ணித் தான் எதனை சாதித்தார்கள் என்று எண்ண தோன்றுகிறது. இப்படியான மாற்றங்கள் உருவாகி வளர்ச்சி அடைந்து படிப்படியாக மாறுபட்டு வரும்போது ஆண்பெண் சமத்துவம் வரும் போது மறுபடியும் அவர்கள் திருமண வாழ்வை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரலாம். சேர்ந்து வாழ்வது பற்றி பெண்கள் யோசிக்கலாம். ஆண் ஒடுக்கு முறை அதிகமாக இருப்பதால் பெண்கள் சில சமயம் திருமணம் செய்யப் பயப்படுகிறார்கள், திருமணங்களை வெறுக்கிறார்கள். ஆண்கள் மிகவும் பலவீனம் இயலாமை காரணமாக படித்து முன்னேற்றம் உடைய பெண்களைப் பார்த்து

(12ம் பக்கம் பார்க்கவும்)

## பெண்ணியம்

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

பயப்படுகிறார்கள். இன்று பெண்களின் அறிவுச் சூழல், நினைவுகள், பார்க்கும் சூழல், வளரும் சூழல் மாறுபட்டிருக்கின்றது. இன்றைய சூழலில் இருந்து வளர்ந்து வரும் பெண்களை ஒரு ஆணால் முற்போக்கு எண்ணத்துடன் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேணும் என்ற எதிர்பார்ப்பில் காலா காலமாக அந்த நினைவில் ஈடுபடுத்தப்பட்டு ஊறியிருக்கிறார்கள். ஆண்கள் மாறவேண்டும். மாறவேண்டி உள்ளது. அதற்காக பெண்களைக் குறைகூறிக்கொண்டிருக்க முடியாது.

**• நீங்கள் ஆண்கள் மட்டும் தான் மாறவேண்டும் என்று நினைக்கின்றீர்களா? இந்த கோட்பாட்டையோ கருத்தையோ ஆணித்தரமாக வைப்பதில் பெண்களுக்கும் பங்கு உண்டு இல்லையா? இதுபற்றிய உங்கள் கருத்து என்ன?**

பெண்கள் தவறு தாயை சென்றடைகிறது. "பார் பெண்ணை இப்படி வளர்த்து வைத்திருக்கிறாய்" என்ற குற்றச்சாட்டாக மாறுகிறது. பெண்ணுக்கு கல்யாணம் ஆகவில்லை என்றால் எல்லோரும் அம்மாவை திட்டுவார்கள். மேலும் அம்மாவுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு கிடையாது. பெண்கள் தனியே பிரிந்து போய் வேலை கூட பார்க்க முடியாது. தனி வாழ்க்கை வாழ்வதற்கு சூழல் அமைத்துத் தரப்படவில்லை. கணவனுக்கு கீழ்வாழும் தன்மை அவர்களைக் கட்டுப்படுத்துகிறது. கணவன் விருப்பத்துக்கு மாறாகவோ அல்லது அந்த குடும்பம் கொண்டு வரும் கட்டுப்பாட்டுக்கு மாறாகவோ எவ்வித தீர்மானங்களும் எடுக்க முடியாத நிலை பெண்களுக்கு இருக்கிறது. அதாவது அவர்களாகவே அந்த நிலைப்பாட்டை எடுத்துக் கொள்கிறார்கள். சமுதாயம் என்ன சொல்கிறதோ, கணவன் என்ன சொல்கிறார்களே அதனை ஏற்றுக் கொண்டே வாழ்கிறாள். இங்கே கணவன் விருப்பம் சமூக விருப்பம் யாவும் பெண்மீது திணிக்கப்படுகிறது. இங்கே பெண் மாறி பெரும் பயன் கிடையாது. முழுக்க முழுக்க ஆண் மாறவேண்டும். அப்படி மாறின் எல்லாமே மாறிவிடும்.

**• பெண்ணிய கோட்பாட்டில் இயங்கும் பெண்களை கலாச்சார விரோதிகள் அல்லது கலாச்சாரத்தின் பெறுமானங்களை அழிப்பவர்கள் என்று பெயர் சூட்டும் சமுதாயத்தின் விமர்சனங்களுக்கு நீங்கள எப்படி முகம் கொடுப்பீர்கள்?**

அது எப்பொழுதுமே தானே கூறுகிறார்கள். வீட்டில் இருந்தாலும் இப்படியான கருத்துக்களை, கதைகளை பெண்கள் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள். அவளது உடை, நடை பேசும் பேச்சுக்களை விபரீதம் கற்பித்து கதைக்கிறார்கள். எங்கு பெண்கள் இருந்தாலும் ஆண்கள் அவர்களை விமர்சித்துக் கதைத்துக் கொண்டே தான் இருப்பார்கள இதற்கு காரணம் ஆண்களின் பலவீனம், பெண்கள் தங்களை விட்டுவிட்டு போய்விடுவார்களோ என்ற அச்சம். இவற்றில் இருந்து விடுபட பெண் போராடி ஆக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதையிட்டு நான் ஒருபோதும் ஆச்சரியப்பட்டதே கிடையாது. அது பற்றி அலட்டிக் கொள்வதே இல்லை. முற்போக்கு வாதிகள் கூட இப்படி பெண்ணிய கருத்துக்களுக்கு முட்டுக் கட்டை போடுபவர்களாக இருக்கிறார்கள். அதனைப் பார்க்கும் போது சற்று வருத்தமாக இருக்கும். இவர்கள இப்படி முட்டாள்களாக இருந்து கொண்டு சமுதாயத்தை பற்றி கதைக்க என்ன உரிமை இருக்கிறது என்று எண்ணத் தோன்றும். அவர்கள் மீது கோபம் வரும். இவர்கள் சனாதனவாதிகளை விட மிகவும் ஆபத்தானவர்கள். சனாதவாதிகள் ஒரு முகத்தை வைத்துக் கொண்டு கதைக்கிறார்கள் செயல்படுகிறார்கள். ஆனால் இவர்களோ பலமுகங்களுடன் செயல்படுகிறார்கள்.

**• கலாச்சாரத்தின் காவலர்கள் பெண்கள் என்ற கருத்து உங்கள் கணிப்பில் எப்படி இருக்கிறது? உதாரணத்துக்கு பெண்கள் வேலைக்கு போனாலும் சரி போகாவிட்டாலும் சரி சமைத்த உணவை பெண்கள் மேசையில் எடுத்து வைத்தாலும் பரிமாறாவிட்டால் கணவன் சாப்பிட மாட்டான் என்ற நிலைப்பாட்டில் வாழ்கிறார்கள்.**

ஆமாம். ஆண்கள் வீட்டில் வேலை செய்யக் கூடாது. பெண்கள் வீட்டு வேலைக்கே உரியவர்கள். வேலை செய்தாலும் சரி வேலைக்கு போகாவிட்டாலும் சரி வீட்டு வேலைகள் யாவும் பெண்களுக்கே என ஆண்களை சமுதாயத்தில் சுகமாக வளர்த்து விட்டிருக்கின்றோம். ஆண்பிள்ளைகளை வீட்டில் செய்ய வைத்துவிட்டால் இருக்கும் பெண்களை பேசியே தீர்த்துவிடுவார்கள். இதிகாசம் இலக்கியம் காவியம் மனுதர்மத்தில் இருந்து இது கூறப்பட்டு வந்து தலைமுறை தலைமுறையாய் சமுதாயத்தில் திணிக்கப்பட்டு வந்த விடயம் இது. வீட்டு வேலை தன் கடமை என்று நம்பியே பெண் செயல்படுகிறாள் அப்படிச் செய்யாதவள் பெண்ணில்லை என்ற நிலைக்கே தள்ளப்படுகிறாள். இதற்கு ஆண் வளர்ப்பு முறை மாற்றப்பட வேண்டும். மாற்றாத வரைக்கும் இதற்கான தீர்ப்பு காணமுடியாது போகும். ஆணை சோம்பேறியாகவும் பெண்களை உழைக்கும் யந்திரமாக தியாகம்செய்பவர்களாக பலி ஆடுகளாக சமுதாயம் வைத்திருக்கின்றது. உளரீதியாக அது பதியப்பட்டிருக்கின்றது.

**• எமது இளம் தலைமுறையினர் தமது காலத்தில் அப்படியான பிரச்சினைகளுக்கு இடம் இருக்காது என நம்புகிறார்கள். காரணம் பல்லின கலாச்சார நாட்டில் வாழ்கிறார்கள். எல்லாக் கலாச்சாரத்திலும் இப்பிரச்சினை இருந்தாலும் மேற்கத்திய கலாச்சாரம் மெருகேறி சீர்திருத்தப் பட்டதால் மாற்றமடைந்து வந்துவிட்டது. அதனால் அனேகமான பெண் பிள்ளைகள் தமிழ் ஆண்களை வெறுக்கிறார்கள். ஆனால் தமிழ் ஆண்கள் மட்டும் தமிழ் பெண்களைத் தான் தேடுகிறார்கள் இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நிச்சயமாக தமிழ் ஆண்கள் மிகவும் மோசமானவர்களாக இருக்கிறார்கள். அதாவது பெண்ணியத்தை மதிக்காமல் தமக்கு கட்டுப்பட்டு அடங்கி நடக்க வேண்டியவர்கள் பெண்கள் என்பதை திணிப்பவர்களாக இருக்கிறார்கள். மிக பிற்போக்கு வாதிகளாக தமிழ் ஆண்கள் இருக்கிறார்கள். அது தான் இங்கு பிரச்சினையே. ஆண்கள் மாற வேண்டும். அவர்கள் சிந்தனை ஓட்டம் மாற வேண்டும். மாறாத வரைக்கும் பெண்கள் ஆண்களை காதலர்களாக ஏற்றுக்கொள்ளக்கூட தயங்குகிறார்கள். ஆனால் தனக்கு சுலபமாக அடங்கிப்போகும் பெண்ணைத் தானே ஆண் தேடுவான்

**• படிப்பு தொழில் போன்றவற்றை பொறுத்தளவில் நாம் எவ்வளவோ வழிகளின் முன்னேறி வந்துள்ளோம். அதை விட ஆரம்பத்தில் வெள்ளை ஆடை அணிந்து கொண்டிருந்த விதவைகள் இப்போ நிற ஆடைகள் அணிகிறார்கள். ஏன் பொட்டும் அணிந்து செல்கிறார்கள். அதனைப் பார்க்கையில் ஓரளவாவது நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம். இது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

இல்லை. என்னால் அப்படிக் கூறமுடியவில்லை. பெரியார் காலத்தில் 60களில் மறுமணம் அதிகமாக காணப்பட்டது என்றே சொல்லலாம். குழந்தைகளோடு கூட மறுமணம் செய்தார்கள். எங்கள் தெருவில் கூட பிள்ளைகளுடன் 3 பெண்கள் மறுமணம் செய்திருந்தார்கள். பிற்பாடு திரைபடங்கள் தலையெடுத்தகாலம். திரைப் படங்களில் விதவை என்றால் வெள்ளை ஆடை என்ற வகையில் எடுத்துக்காட்டி சினிமா விதவை மறுமணத்தை கொச்சைப்படுத்தியது. 80களுக்கு பிற்பாடு சினிமாவினால் மறுமணம் அரிதாகியே விட்டது. விதவையானால் காதலிக்கக் கூடாது திருமணம் செய்யக்கூடாது என்பதை சினிமா ஊன்ற வைத்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

**• விதவை திருமணங்களே ஒடுக்கபட்ட நிலையில் விவாகரத்து செய்த பெண்கள் மறுமணம் செய்வது எப்படி? விவாகரத்து செய்த பெண்கள் சமுதாயமே குற்றக் கண்ணோடுதானே பார்க்கிறது. இல்லையா?**

ஆமாம். விவாகரத்து பெண்கள் மறுமணம் செய்வது மிகவும் சிரமமான தொன்று தான்.

**• இம்மகாநாடு பெண்களுக்கு மட்டும் என்று ஒழுங்கு செய்யப்படுவது போதாது. ஆண்களையும் உள்வாங்கிக் கொண்டு அமைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உலக யதார்த்தத்தை புரிந்துகொள்ளவும் விட்டுக்கொடுத்து வாழவும் பழைய மூட நம்பிக்கையில் இருந்து விடுபடவும் வாய்ப்புகள் உருவாகும். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

அதற்காகவேதான் பெண்களுக்குள் ஒரு நாள் அமர்வையும் ஆண்களை உள்வாங்கி இரண்டாம் நாள் அமர்வையும் ஏற்படுத்தியிருந்தோம். இரண்டாம் நாள் அமர்வுதான் மிக முக்கியம் வேண்டப்படுவது. இந்தியாவில் குடும்பவன்முறைச் சட்டம், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சட்டம் என்பன வந்திருக்கின்றன. மகளிர் தினத்தை ஒட்டிப் பெண்களைக் கூட்டி வைத்து மேடைகளில் பேசும் போதெல்லாம், ஆண்கள் பெண்கள் மீது வன்முறை செலுத்தக் கூடாது என்று திட்டம் தீட்டுவதாலோ சொல்லிக் கொள்வதாலோ எந்தப் பயனும் இல்லை. ஆண்களைக் கூட்டி வைத்து பேசவேண்டும் என்று கூறுவேன். எத்தனை சட்டங்கள் கொண்டு வந்தாலும் இந்தியாவில் அதனை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் ஆண்கள். எனவே அவர்களுக்குத்தான் இதுபற்றி எடுத்துரைக்க வேண்டும். ஆணாதிக்க சிந்தனை எங்குமே ஊறியிருக்கிறது. நீதிமன்ற மாகட்டும் காவல் நிலையமாகட்டும் ஆணுக்கு ஒரு பார்வை பெண்ணுக்கு ஒரு பார்வை. ஆணாதிக்கம். இதனால் தீர்ப்பும் பெண்ணுக்கு சாதகமாக கிடைப்பதில்லை. நீதிமன்றம் வரை சீர்திருத்தம் தேவைப்படுகின்றது. காவல் துறையினருக்கு பயிற்சிப் பட்டறை இது சம்பந்தமாக நடத்தவேண்டும். இதற்கு பிற்பாடு பொது ஆண்களுக்கான

*(13ம் பக்கம் பார்க்கவும்)*



## ஆணாதிக்க சிந்தனை எங்குமே ஊறியிருக்கிறது

## பெண்ணியம்

*(12ம் பக்கத் தொடர்ச்சி)*

பயிற்சிப் பட்டறை நடாத்த வேண்டும். ஆ-ணாதிக்க வியாபகம், பாரதி கூறிய பெண்ணடிமை இருக்கும் வகைகளை விளக்க வேண்டும். இதனை சிறுவயது ஆண்களில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் பெண்ணிய சீர்திருத்தம் பற்றி சிந்திக்க முடியும். அப்போது தான் வெற்றியை பெற வாய்ப்புண்டாகும். மனித உரிமைக் கல்வியை, ஒரு ஆண் எப்படி பெண்களை நடாத்த வேண்டும் என்பதற்கான பயிற்சிப் பட்டறைகளை உருவாக்கி உணர வைக்கலாம்.

**• இந்து சமயத்தில் சிவன் பாதி சக்தி பாதி என்றும் மதிப்புரிய ஸ்தானத்தில் வைத்துபார்க்கும் முறை இருக்கின்றது. ஆனால் நடைமுறையில் மதிக்கப்படுவதில்லையே?**

மதமாற்றங்கள் யாவும் பின்னால் வந்தவையே ஆரம்பத்தில் ஆணாதிகம் தலை தூக்கி நின்றது. மனப்பக்குவம் காரணமாக மதத்துக்குள் சேர்க்கப்பட்ட செருகல் நி-லை, மெருகூட்டப்பட்ட நிலையே இந்த வழிபாட்டு முறையும் கூட. இந்து மதகோயிலுக்குள் கருவறைக்குள் பெண் செல்ல முடியாது. ஆண் பூசகர் உண்டே தவிர பெண் பூசகர்கள் இல்லையே. சக்தி சமம் என்று கருதப்படுவதனால் மாதவிலக்கு சமயங்களில் பெண் ஒதுக்கப்படுகிறாளே அது ஏன்? இப்படி எம் சமுதாய அமைப்பின் வடிவமே ஆணாதிக்கத்தையே வலுப்படுத்தி நிற்கிறதே. இப்போது மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயிலில் பெண் பூசர்கள் பூசை செய்கிறார்கள். இம்மாற்றம் 20 30 வருடங்களுக்கு பின்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதுவும் ஒரே ஒரு கோயிலில் மட்டுமே.

**• இந்த வருட மாநாட்டில் எதிர்பார்த்த அளவு மக்கள் சமூகம் தரவில்லை. இதனை மாற்றியமைப்பதானால் எப்படி அமைக்கலாம். அதிகப்படியாக மக்கள் வருகைதர அதற்காக என்-ன நடவடிக்கைகளை கொண்டுவரலாம். இதைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

பெண்கள் தங்கள் தங்கள் குழுக்களுடனேயே சேர்ந்து இயங்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். அது மாற்றப்பட வேண்டும். மாற்றுக் கருத்து சிந்தனை ஓட்டங்கள் இருந்தாலும் அவர்கள் குழுக்கள் அமைத்து திட்டங்கள் தீட்டி செயல்பட்டாலும் பொது விடயங்கள் என்று வரும்போது ஒன்றுசேர்ந்து பங்குபெறுவது மிகவும் முக்கியம். ஆண்கள் ஒரு விடயத்தை நடத்தினால் மாற்றுக்கருத்து கொண்ட ஆண்களோ, மாற்றுக் குழுக்களைச் சேர்ந்த ஆண்களோ அங்கு வந்து பங்கு கொள்வதை அவதானிக்கலாம். அவர்கள் வருவார்கள் என்ன நடக்கிறது என்று பார்த்து தெரிந்து கொள்வார்கள். தமது குழுக்களை முன்னேற்ற அது பயன்படுமா என்று கூட பார்ப்பார்கள். ஆனால் பெண்கள் தங்களுக்குள்ளேயே அமைப்புக்குள்ளேயே நின்று விடுவார்கள். வெளியே வரமாட்டார்கள். என்னுடையது இல்லை நான் ஏன் செல்ல வேண்டும் என்ற சிறுபிள்ளைத் தனமான சிந்தனை மனபான்மை அவர்களிடம் உண்டு.

**• பொதுமக்கள் வருகை மிகக் குறைவாக இருந்திருக்கிறது இல்லையா? அவர்கள் வருகை குறைவுக்கான காரணம்.**

இதனை நாங்கள் எதற்காக நடத்துகிறோம் என்பதனை முதலில் புரிந்து கொ-ள்ள வேண்டும். இங்கு வருகைதருபவர்கள் தரக்கூடியவர்கள் எழுத்தாளர்கள், மீடியாக்கள், மாற்றுச் சிந்தனைவாதிகள பொதுமை வாதிகள், இயக்க வாதிகள் இப்படிப்பட்டவர்கள் தான். அவர்கள் அந்தந்த பகுதியில் ஒரு issueவை எழுதும் போது இங்கு நடைபெற்ற விடயங்களை உதாரணங்காட்டி எழுதுவர்கள் அப்பொழுது இவ்விடயங்கள் அப்பகுதி பிரச்சனைகள் நடவடிக்கைகளுக்கு ஊட்டம் கொடுப்பதாக நிச்சயம் அமையும். பல்வேறு பகுதிசார் பிரச்சினைகளை ஒடுக்குமுறைகளைக் கேட்டுக்கொண்டு செல்லும் போது அவர்கள் கையாண்ட வழிமுறைகளையும் எடுத்துச் செல்வோம். சர்வதேச அமைப்புகளோடு தொடர்புகொள்ள இவ்வமைப்பின் அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ள எடுத்தியம்ப கண்டனம் தெரிவிக்க வாய்ப்பாகும். கூட்டம் கூட்டி பார்வையாளர்களுக்கு செய்தி சொ-ல்லும் விடயம் அல்ல இது. பொதுமக்கள் வரவையோ பொதுப் பெண்களையோ இங்கு ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் வரமாட்டார்கள்.

**• நான் வரும்போது இந்த நோக்கத்தை எதிர்பார்த்து வரவில்லை. பத்திரிகை விளம்பரம் பார்த்து வந்திருந்தேன். அதனால் தான் ஏனையோர் வரவை எதிர்பார்த்தேன்.**

நீங்கள் விளம்பரம் பார்த்து வந்திருந்தாலும், உங்கள் நினைப்பு வேறு, எல்லாவற்றையும் அறியும் ஆற்றலால் உந்தப்பட்டு வந்தீர்கள். பொதுப் பெண்களுக்கு சில விடயங்களை நாம் கொடுக்கவேண்டுமேயானால் பத்திரிகை வாயிலாகவோ அன்றி தொலைக்காட்சி, வானொலி வாயிலாகவோ புறோகிராம் தயார் பண்ணி எடுத்துச் செல்லவேண்டும். அப்போது தான் அது அவர்களை சென்றடையும்.

**• உங்கள் அணங்கு பற்றிய மேலதிக தகவல்கள் ஏதாவது சொல்ல நினைக்கிறீர்களா?**

படைப்பு சுதந்திரம் பற்றிய தாக்குதல்கள் தமிழ்நாட்டில் உருவாகிய பிற்பாடு வாழ்வு சுதந்திரம் பேச்சு சுதந்திரம் பற்றிய கருத்துக்கள் மீடியாக்களில் ஆண் பக்க சார்பாகவே இருந்தது. எங்கள் கண்டனங்களை அப்பத்திரிகையில் போட்டாலும் திருத்தம் செய்தே போடப்பட்டது. நாம் கண்டனங்கள் எழுதினால் முதலில் சம்பந்தப்பட்ட ஆண்களுக்கு அனுப்பி திருத்தம் செய்வது மட்டுமல்ல அவர்களின் பதிலையும் சேர்த்தே வெளியிடுவார்கள். இது பெரிய அநியாயமான செயல் இல்லையா? எங்கள் படைப்புச் சுதந்திரம் எழுத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது. இதனை ஜீரணிக்க முடியாத கட்டத்தில் தான் எமக்கு என்றொரு தனித்தளம் தேவை என்ற நிலை உருவானது. எனக்கும் இந்த சமூகத்துக்கு நான் ஏதாவது என்தலைமுறையில் செய்ய வேண்டும் என்று உந்தப்பட்ட நிலையில் தான் இந்த அணங்கு பத்திரிகையை உருவாக்கப்பட்டது. பெரிய அளவில் என்னால் செய்ய முடியவில்லை. சிறு அளவிலாவது என்னால் செய்ய முடிந்ததே என்ற திருப்தி எனக்குண்டு. என்னை அடுத்த தலைமுறை பெண்கள் இவ்வளவு விடயங்கள் நடந்திருக்கிறது. எமக்காக ஒன்றுமே செய்யாது போய்விட்டார்களே ஒரு சின்ன மாற்றத்தையாவது ஏற்படுத்தி சென்றிருக்கலாம் என்று கூறும்படி வைக்க விரும்பவில்லை. எங்கள் மாற்றுக் கருத்தை கண்டனத்தை முன்வைக்க ஒரு தளமாக அணங்கு பத்திரிகை உருவாக்கப்பட்டது. இதனால் நிறை-ய விடயங்கள் மக்கள் கைக்கு சென்றடைந்திருக்கின்றது. அணங்கு வந்த பிற்பாடு ஆண்கள் பேசுவது சற்று குறைந்திருக்கின்றது. பெண்கள் மீதான தாக்குதல் தொ-டுப்பது குறைசொல்வது யாவும் குறைந்துள்ளது.

*(விமான நிலையத்தில் இன்னும் சில மணி நேரத்துக்குள் நிற்க வேண்டி இருந்த போதும் எமக்காக நேரம் ஒதுக்கி இவ் நேர் காணலை தந்ததிற்கு வைகறை சார்பிலும் என்சார்பிலும் வைகறை வாசகர் சார்பிலும் மாலதி மைதிரிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.)*

**படங்கள்: கருணா**
*Digi Media Creations*



## எங்கள் மாற்றுக் கருத்தை கண்டனத்தை முன்வைக்க ஒரு தளமாக அணங்கு பத்திரிகை உருவாக்கப்பட்டது

### செய்தித் துளி

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் விதந்துரைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லையென சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கடந்த 12-08-2008 அன்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். 1953ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராக நடத்தப்பட்ட ஹர்த்தாலின் ஞாபகார்த்தமாக அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில் எமது நாட்டை சுரண்டிய பிரித்தானிய ஆட்சியின் பின்னர் மக்கள் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு எதிராக 1953 ஆம் ஆண்டு கிளர்ந்தெழுந்தனர். தாம் சுரண்டப்படுவதையும் அதனால் வாழ்க்கையில் பாரச்சுமை ஏற்படுவதையும் உணர்ந்த இடதுசாரிகள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்ததன் காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இன்றைய சூழ்நிலையில் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் சகல இன மக்களும் உரிமைஞுடன் வாழவேண்டியது அவசியமானது. 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்து எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படும். இதில் கிழக்கு மாகாண பொலிஸ் அதிகாரி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர் மற்றும் மாகாண முதலமைச்சர் ஆகிய மூவர் அங்கம் வகிப்பர். எனவே பொலிஸ் அதிகாரம் தனித்து ஒருவரினது கையில் செல்லப் போவதில்லை. அது போல் காணி அதிகாரம் தொடர்பில் அதனை தீர்மானிக்க தேசிய காணி ஆணைக்குழு அமைக்கப்படும். இதன் மூலம் எந்தச் சிக்கலும் ஏற்படப் போவதில்லை. இந்த அதிகாரங்கள் இந்தியாவில் வழங்கப்பட்ட அதிகாரங்களை விட குறைவானதாகும் என்றார்.

---

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நேற்று (13-08-2008) முற்பகல் 11.00 மணியளவில் 12 குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையானதில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே போல் கடந்தமாதம் 17ம் திகதி இவ்வாறு நலன்புரி நிலைய குடியிருப்புகள் தீக்கிரையானதில் 385 பேர் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பாதிப்புக்குள்ளானவர்கள் அண்மையிலுள்ள பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு உணவு வழங்கப்பட்டு வருகிறது.